# PRESS NOTE

**பிறப்பு சான்றிதழ் விவரங்களை கொடுப்பதற்கு லஞ்சம் பெற்ற இளநிலை உதவியாளருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டணையும் ரூ.40,000/- அபராதம் விதித்து தீர்ப்பு**

****

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை தாலுக்கா, மெய்யூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.சுரேஷ், என்பவரின் அண்ணன் மகன் திரு.பிரேம்குமார் என்பவரை பள்ளியில் சேர்ப்பதற்கு பிறப்பு சான்றிதழ் தேவைபட்டதால் மேற்படி திரு.சுரேஷ் என்பவர் கடந்த 07.03.2011-ந் தேதி திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று அவரின் அண்ணன் மகனின் பிறப்பு சான்றிதழ் சம்மந்தமாக கேட்டபோது நகராட்சி அலுவலகத்தில் பணியிலிருந்தவர் அவரது அண்ணன் மகன் திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் பிறந்ததால் அங்கு சென்று அவரது பிறந்த விவரங்களை வாங்கி வரும்படி தெரிவித்துள்ளார். அதன்பின்னர் புகார்தாரர் திரு.சுரேஷ்குமார் என்பவர் தனது அண்ணன் மகனின் பிறந்த விவரங்களை பெறவேண்டி கடந்த 09.03.2011-ந் தேதி திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் உள்ள இணை இயக்குநர், சுகாதாரத்துறை அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியில் இருந்த திரு.ஆ.லோகநாதன், இளநிலை உதவியாளர் அவர்களை சந்தித்து நகராட்சி அலுவலகத்தில் தெரிவித்த விவரத்தினை கூறி அவர் அண்ணன் மகன் பிறந்த விவரங்களை கேட்டுள்ளார். அப்போது அங்கு பணியில் இருந்த திரு. திரு.லோகநாதன் என்பவர் மேற்படி சிறுவனின் பிறந்த விவரங்களை கொடுப்பதற்காக தனக்கு லஞ்சமாக பணம் ரூ.500/- கொடுத்தால்தான் குழந்தை பிறந்த விவரத்தை கொடுப்பேன் என்று தெரிவித்துள்ளார். பின்னர் புகார்தாரர் திரு.சுரேஷ் என்வர் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் உள்ள இணை இயக்குநர், சுகாதாரத்துறை அலுவலகத்தில் பணிபுரியும் திரு.லோகநாதன், இளநிலை உதவியாளர் என்பவர் தனது அண்ணன் மகன் பிரேம்குமார் என்பவரின் பிறப்பு விவரங்களை தருவதற்கு ரூ.500/- லஞ்சம் கேட்பதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் திரு.லோகநாதன், இளநிலை உதவியாளர் என்பவர் மீது காஞ்சிபுரம் லஞ்ச ஒழிப்பு துறையில் காவல் ஆய்வாளர் திரு.வெங்கடேசன் என்பவரால் கடந்த 28.03.2011-ந் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே, புகார்தாரர் திரு.சுரேஷ் என்பவரிடம் எதிரி திரு.லோகநாதன் அவர்கள் பணிபுரியும் அலுவலகத்தில் லஞ்சப்பணம் ரூ.500/-ஐ கேட்டு பெற்றபோது கையும் களவுமாக பிடிபட்டவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. இவ்வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்து எதிரி திரு.லோகநாதன் என்வரின் மீது திருவள்ளூர் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில்

குற்றப்பத்திரிகை எதிரி மீது தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கினை மாண்புமிகு திருவள்ளூர் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்கள், வழக்கினை விசாரணை செய்து இன்று 04.01.2023-ந்தேதி எதிரி திரு.லோகநாதன் என்பவர் புகார்தாரரிடமிருந்து லஞ்சமாக பணம் கேட்ட குற்றத்திற்காக 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், மற்றும் ரூ.20,000/-ம் அபராதமும், மேலும் பணத்தை கேட்டு பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.20,000/-ம் அபராதமும் விதித்து உத்திரவிடப்பட்டது.